**1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

O.S.No. 490/2023 Date : 17.03.2026

பெயர் : சாலமன் வாசா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

1. என்ன படித்துள்ளீர் என்றால் நான் படிக்கவில்லை.தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எந்த வயதில் வேலைக்கு சென்றீர்கள் என்றால் ஆறு வயது முதல் வேலைக்கு சென்றேன். என்ன வேலை செய்தீர்கள் என்றால் கல் உடைக்கும் வேலை செய்தேன் எனது குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களும் மேற்படி கல் உடைக்கும் வேலைதான் செய்து வந்தார்களா என்றால் ஆமாம். எங்களது பூர்வீகம் கன்னியாகுமரி மாவட்டம் என்றாலும் கல் உடைப்பதற்காக வேலைக்காக குடி பெயர்ந்து வந்துள்ளோம் என்றால் சரிதான்.நாங்கள் குடியிருக்கும் பகுதியில் வசிக்கும் அனைத்து நபர்களும் கல் உடைப்பதற்கு வேலைக்காக குடி பெயர்ந்து வந்தவர்கள் என்றால் சரிதான். தற்போது யாரும் கல் உடைக்கும் வேலைக்கு செல்வதில்லை என்றால் சரிதான். கல் உடைக்கும் இடத்தின் அருகிலே தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் குடும்பத்துடன் வசித்து வருகிறீர்களா என்றால் இல்லை,

2. எனது தகப்பனார் 1995 ஆம் ஆண்டு காலமாகிவிட்ட பின்னிட்டு தான் மேற்படி இடத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் வசித்து வந்தோம்.எனது தகப்பனார் தாவா சொத்தை 1984 ஆம் ஆண்டு ஜான்சன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்று அது முதல் அந்த சொத்தில் எங்களது குடும்பத்தினருடன் வசித்து வந்தோம் என்றால் இல்லை. அவரிடம் இருந்து எந்த சொத்தும் வாங்கவில்லை. தாவா சொத்திற்கு 1984 முதல் 1995 ஆம் ஆண்டு வரையில் எனது தகப்பனார் பெயரில் வீட்டு வரி செலுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை.அது ஜோடிக்கப்பட்டதாகும்.

2. மேற்படி ஆவணத்தின் உண்மை தன்மையை பெறுவது குறித்து ஏதேனும் நடவடிக்கை எடுத்தீரா என்றால் எடுத்தேன். அந்த ஆவணங்கள் உண்மை தன்மை அற்றது என சொல்லி உள்ளார்கள்.என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் விண்ணப்பித்து தகவல் பெற்று அதனை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணமானது வா.சா.ஆ. 27 ஆவணமாகும் . வா.சா.ஆ. 27 ஆவணத்தில் ரசீது எண் மற்றும் அந்த அதை ரசீது எந்த தேதியில் யாருடைய பேரில் வழங்கப்பட்டுள்ளது என கேள்வி தொடுத்தீரா என்றால் இல்லை எந்த சொத்திற்கு அந்த ரசீது வழங்கப்பட்டது என கேள்வியில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை.தகவல் அறியும் உரிமை சட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் மேற்படி தகவல்களை கேட்டேன் என்றால் சரிதான். தாம்பரம் மாநகராட்சி எப்போது உருவாக்கப்பட்டது என்றால் நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்டது.

3. நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட தாம்பரம் மாநகராட்சி 1984 முதல் 1995ஆம் ஆண்டு வரையிலான வீட்டு வரி ரசீதுகள் வழங்கப்பட்டது தொடர்பான பதிவுகள் இருக்காது என்றாலும் அதனை அறிந்து வேண்டும் என்று நான் மேற்படி தவறாக தகவல் கோரி உள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான பதில் கிடைக்கக் கூடாது என்பதற்காக முழுமையான கேள்விகளை கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் இரண்டாவது பத்தியில் எனக்கு அதிக சொத்துக்கள் உள்ளதாக குறிப்பிட்ட நிலையில் அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . நான் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி சொத்து அது எனக்கு உரிமையானது என சொல்லி உள்ள நிலை அந்த சொத்து எனக்கு எவ்வகையில் உரிமை ஏற்பட்டது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் நான் அந்த இடத்தை எனது ஆக்கிரமிப்பில் வைத்திருந்த இடமாகும். நான் அந்த சொத்தை தன்னிச்சையாக ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் ஏற்கனவே எனது தகப்பனார் ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வந்த சொத்தை பின்னிட்டு அவர் காலமான பின்பு நான் அனுபவம் செய்து வந்த பகுதிக்கு 1996 ஆம் ஆண்டு முதல் வரி செலுத்தி வருகிறேன் என்றால் எனது தகப்பனாருக்கும் அந்த சொத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

4. நான் தான் தன்னிச்சையாக அந்த சொத்தை ஆக்கிரமிப்பு செய்து எனது அனுபவத்தில் இருந்து வருவதாகும்.நான் தாக்கல் செய்த நிறுவனம் வாக்குமூலத்தில் மேற்படி ஆக்கிரமிப்பு செய்த சொத்தை நானும் எனது சகோதரரும் பிரித்துக் கொண்டோம் என சொல்லியுள்ள நிலையில் மேற்படி சொத்தானது என தகப்பனார் ஆக்கிரமிப்பு செய்த பின்னிட்டு அவரது வாரிசுகள் என்ற முறையில் நானும் எனது சகோதரரும் பிரித்துக் கொண்டோம் என்றால் இல்லை.2008 ஆம் ஆண்டு சொத்தில் பாகம் கோரி எனது சகோதரிகளான சலோமி, ரத்னா பாய், பெல்சி ஆகியோர் பாகம் கோரி என்னிடம் பிரச்சனை செய்து பின்னிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் நான்தான் காவல் நிலையத்தில் எனது இடத்தில் அத்துமீறி நுழைந்ததால் புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ளுமாறு சொல்லி அனுப்பி விட்டார்கள்.எனது மூன்று சகோதரிகளுக்கு சொத்தில் பாகம் கொடுப்பதற்கு பதிலாக தொகையாக கொடுத்து விட்டேன் என்றால் இல்லை.

5. எனது தகப்பனாரின் சொத்து என்பதால் தான் எனது மூன்று சகோதரிகள் அதில் என்னிடம் பாகம் கேட்டு வந்தார்கள் என்றால் இல்லை மற்றொரு சகோதரிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதால் தங்களுக்கும் பாகம் கேட்டு சென்றால் சொத்து கிடைக்கும் என்பதால் அவ்வாறு செய்தார்கள். ஒன்றாம் பிரதிவாதி எஸ்தர் அருள்மணி என்பவருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1999 ஆம் ஆண்டு இருக்கும். அவருக்கு இரண்டு வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். ஒன்றாம் பிரதிவாதி அவரோடு கணவருடன் வசித்து வருகிறாரா என்றால் இல்லை. எந்த வருடம் ஒன்றாம் பிரதிவாதி அவரது கணவரை பிரிந்து திரும்பி வந்தார் என்றால் 2001 ஆம் ஆண்டு வந்தார். அந்த காலகட்டத்தில் இருந்து தாவா சொத்தில் தான் ஒன்றாம் பிரதிவாதி வசித்து வந்தார் என்றால் சரிதான்.எனது தாயார் குடியிருந்து வந்த வீடானது குடிசை என்றால் இல்லை பேஸ்மெண்ட் போட்ட கூரை போட்ட வீடாகும் அதற்கு பின்பாக தான் எனது கூரை வீடு அமைந்துள்ளது. எனது தாயார் இறக்கும் வரையில் ஒன்றாம் பிரதிவாதியுடன் தான் ஒரே வீட்டில் வசித்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிறுவனம் வாக்குமூலத்தில் தாவா சொத்தில் எனது அனுமதியின் பேரில் ஒன்றாம் பிரதிவாதி தங்கிக்கொள்ள அனுமதித்ததாக சொல்லும் நிலையில் அது தொடர்பாக ஏதேனும்

ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் இல்லை. எனது தாயார் தனியாக வசித்து வந்ததால் அவருடன் ஒன்றாம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளுடன் சேர்ந்து வசித்துக் கொள்ளுமாறு அனுமதித்த அவரும் அதில் வசித்து வந்தார்.

6. அதற்கு முன்பாக எனது தாயார் அந்த வீட்டில் தனியாக தான் வசித்து வந்தாரா என்றால் ஆமாம். எனது தாயார் அவர் வீட்டில் தனியாக வசித்து வந்தநிலையில் அதில் அவருக்கு உரிமை ஏற்பட்டுள்ளது என்றாலும் அதன் அடிப்படையில் தான் ஒன்றாம் பிரதிவாதியை அங்கு தங்க வைத்தார் என்றால் சரியல்ல தாவா சத்தானது தன்னிச்சையாக நான் ஆக்கிரமிப்பு செய்த சொத்தாகும். அதில் எனது தாயார் என்பது அடிப்படையில் அவர் அந்த வீட்டில் வசித்து வந்தார்.தாவா சொத்தில் உள்ள வீட்டை நான்தான் கட்டினேன் என்பதற்காக ரசித்துகள் மற்றும் கட்டிட வரைபட அனுமதி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் தாவா சத்தானது புறம்போக்கு இடம் என்பதால் அதற்கு வரைபட அனுமதி எதுவும் வழங்கப்பட மாட்டார்கள்.தாவா வழக்கில் ஏற்கனவே ஒருதலை பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. மேற்படி ஒருதலை பட்ச தீர்ப்பாணை பெற்ற பின்னிட்டு மின்வாரிய அலுவலகத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அந்த வீட்டிற்கு வழங்கப்பட்டிருந்த மின் இணைப்பை துண்டித்து விட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டில் எனது தாயார் மற்றும் எனது சகோதரி ஒன்றாம் பிரதிவாதி அவரது வாரிசுகள் ஆகியோர் மின் இணைப்பு இல்லாமல் ஐந்து ஆண்டுகள் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான் நானும் தான் மின் இணைப்பு இல்லாமல் வசித்து வந்தேன். எனது வீடானது தாவா சொத்திற்கு பின்புறத்தில் அமைந்துள்ள வீடு என்றால் சரிதான்.எனது வீட்டிற்கு வேறு மின் இணைப்பு எண் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வேறு மின் இணைப்பு எண் என்றால் சரிதான்.நீதிமன்ற உத்தரவுக்கு பின்னிட்டு தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு மட்டுமே துண்டிக்கப்பட்டது என்றாலும் எனது வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு துண்டிக்கப்படவில்லை என்றால் நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன்படி தான் எனது வீட்டிற்கு மின் இணைப்பு பெற்றேன். நான் சொல்வது தவறானது என்றால் சரியல்ல. மின் இணைப்பு இல்லாத போது எனது தாயாருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டு கால் துண்டிக்கப்பட்டு விட்டது என்றால் இல்லை.

8. மின் இணைப்பு பெற்ற பின்னிட்டு தான் அதன் பின்னிட்டு ஏற்பட்ட நீரிழிவு நோயால் கால் துண்டிக்கப்பட்டது. எனது தாய் மற்றும் தந்தை சகோதரி ஆகியோருக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மின் இணைப்பு பெற முடியாமல் நடவடிக்கை எடுத்து விட்ட நிலையில் கணவர் கைவிட்ட பின்னிட்டு எனது சகோதரி எனது வீட்டிற்கு வந்து இருந்தால் நான் அவரை அனுமதித்திருக்க மாட்டேன் என்றாலும் அந்த வீடானது எனது தகப்பனாரின் வீடு என்பதால் தான் அவரை அதில் தங்க அனுமதித்தேன் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த நிருபன வாக்குமூலத்தில் ஒன்றாம் பிரதிவாதியை எந்த தேதி மாதம் வருடத்தில் மேற்படி சொத்தில் தங்கிக் கொள்ள அனுமதி அளித்தேன் என்றும் அதன் பின்னிட்டு எந்த தேதி மாதம் வருடத்தில் ஒன்றாம் பிரதிவாதியை அந்த சொத்தில் இருந்து காலி செய்து கொடுக்குமாறு சொன்னதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் அந்த விபரத்தை எனது வழக்கறிஞரிடம் சொல்லி உள்ளேன் ஆனால் அவர் அதனை நிருபன வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளாரா என்று எனக்கு தெரியவில்லை.

9. தாவா சொத்தின் புல எண் 305 கிடையாது என்றும் அதனுடைய புல எண் 302 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் ஆனது 302 என எடுத்துரைப்பதற்கு அந்த சொத்தில் உண்டான புல வரைபடத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை ஆனால் அந்த சொத்திற்குண்டான அடங்கல் கணக்கு பதிவேடு தாக்கல் செய்துள்ளேன்.நான் இவ்வழக்கில் தாவா சொத்து தொடர்பாக எவ்வித அடங்கல் பதிவேடு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதனை தாக்கல் செய்துள்ளதாக வழக்குக்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.நான் அந்த ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன் ஆனால் அவர் தாக்கல் செய்தாரா என்று தெரியவில்லை. நான் இவ்வழக்கை முதன் முதலில் தாக்கல் செய்யும்போது ஒரே ஒரு சொத்து விவரம் மட்டும் குறிப்பிட்டு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த சொத்து விபரத்தில் விஸ்தீரணம் 2280 சதுர அடி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதன்பினிட்டு அதன் சொத்து விபரத்தை திருத்தம் செய்து நான்கு அட்டவணைகளாக சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. அதில் குறிப்பிட்டுள்ள சி அட்டவணை சொத்தில் நான் குடியிருந்து வரும் சொத்து என்றால் சரிதான் நான் குடியிருந்து வரும் அந்த சொத்தில் விஸ்தீரணம் 1170 சதுர அடி என்றால் சரிதான்.சி அட்டவணை சொத்திற்கு 26 x 45 அடி அளவு கொண்ட மனை இருப்பதாக புலவரைபடம் மற்றும் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாவா சத்தானது புறம்போக்கு இடம் என்பதால் அந்த ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாது.தாவா வழக்குரையில் குறிப்பிட்டுள்ள டி அட்டவணை சொத்து தொடர்பாக எந்த விபரங்களும் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர் அது பற்றி குறிப்பிட்டுள்ளாரா என்று தெரியவில்லை. பி அட்டவணை சொத்தை தான் ஒன்றாம் பிரதிவாதி எனது வசம் ஒப்படைக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் தனியாக பி அட்டவணை சொத்து தொடர்பாக எவ்வித சங்கதியும் குறிப்பிடவில்லை என்றால் மேற்படி சொத்தானது செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுக்கப்பட்ட சொத்து என குறிப்பிட்டுள்ளேன்.

11. நான் முதலில் தாக்கல் செய்த வழக்குரையில் ஒன்றாம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோராமல் அதன் பின்னிட்டு கோரி உள்ளேன் என்றால் சரிதான். முதலில் தாக்கல் செய்த வழக்குரையில் மேற்படி ஒன்றாம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன். ஆனால் அந்த பரிகாரம் அடிக்கப்பட்டு விட்டதால் அதன்பிறகு மனு செய்து அந்த பரிகாரத்தை வழக்கில் குறிப்பிட்டுள்ளேன்.நான் சொல்வது போல் அந்த மாதிரி பரிகாரம் ஏதும் அடிக்கப்படவில்லை என்றாலும் நீதிமன்ற கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்காக அதனை நான் குறிப்பிடாமல் விட்டுவிட்டு தற்போது புதிதாக அந்த பரிகாரத்தை பல வருடங்களுக்கு பின்பு கோரி உள்ளேன் என்றால் சரியல்ல.தாவா சொத்து எனக்கு உரிமையானது என விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.விளம்புகை பரிகாரம் கோராமல் தாவா சொத்தின் சுவாதீன ஒப்படைப்பு பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்த இவ்வழக்க நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.நான் தாவா வழக்கை முறையாக மதிப்பீடு செய்து உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

12. பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டிருந்த சொத்து வரியானது இந்த வழக்கில் ஒருதலை பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பின்னிட்டு தான் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.ஒன்றாம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்கோர் உரிமை மனுவிற்கு தாவா சொத்து தர்ம கண் நாடார் என்பவருக்கு உரிமையான சொத்து கிடையாது என குறிப்பிட்டு எவ்வித பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாவா சொத்தானது புறம்போக்கு இடமாகும். தாவா சொத்தானது தர்மகண் நாடார் என்பவருக்கு சொந்தமான சொத்து எனக் குறிப்பிட்டுள்ளதை மறுத்து எவ்வித பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி நபர் பெயரில் வழங்கப்பட்ட எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாததால் அதனை மறுத்து பதில் உரை தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்ய முயன்று வருவதாக சொல்லியுள்ள நிலையில் 1 ஆம் பிரதிவாதி சொத்தை விற்பனை செய்தது தொடர்பாக பேப்பர் விளம்பரம் செய்ததாகவோ அல்லது கிரைய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தி கொண்டது தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்து விடுவார் என அனுமானத்தில் சொன்னேனா என்றால் ஆமாம்.

13. 25.06.2008 அன்று பிரதிவாதிகள் என்னை தாக்கியது தொடர்பாகவும் அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் குறிப்பிட்ட நிலையில் அந்த புகாரின் பேரில் ஏதேனும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.வா.சா.ஆ. 33 ஆவணமானது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் புல எண் 302 இடத்திற்கு யாருடைய பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என நான் கேள்வி கேட்டுள்ளேன் என்றால் சரிதான். புல எண் 305 மற்றும் புல எண் 302/17 ஆகிய புல எண்கள் தொடர்பாக கேள்விகள் கேட்கவில்லை என்றால் சரிதான். எனக்கு தேவையான தகவல்களை பெறுவதற்காக முழுவதுமாக மேற்படி புல எண்களுக்கு கேள்விகள் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல பிரதிவாதிகள் புல எண் 302 பட்டா வைத்துள்ளதாக சொன்னார்கள். அதனால்தான் புல எண் 302 தொடர்பான கேள்விகளை கேட்டேன். தாவா சொத்தில் ஒன்றாம் பிரதிவாதி 2022 ஆம் ஆண்டு தளம் போட்ட வீடு கட்டி உள்ளார் என்றால்

சரிதான்.மேற்படி கட்டுமானத்தை நிறுத்துவது தொடர்பாக இவ்வழக்கில் ஏதேனும் இடையிட்டு மனு தாக்கல் செய்தீரா என்றால் இல்லை அந்த காலத்தில் கொரோனா பெருந்தொற்று இருந்து வந்ததாலும் உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு நிலுவையில் இருந்து வந்ததாலும் தாக்கல் செய்யவில்லை.

14. தாவாசத்தில் ஒன்றாம் பிரதிவாதி செப்டிக் டேங்க் மற்றும் சம்ப் அமைப்பதற்கு பள்ளம் தோண்டினார்கள் என்றால் சரிதான் நான் நடந்து செல்லும் வழியில் தான் பள்ளம் தோண்டி இருந்தார்கள். நான் நடந்து செல்லும் வழியில் பள்ளம் தோண்டவில்லை என்றாலும் தாவாசத்தில் தான் தோண்டி இருந்தார்கள் என்றால் சரியல்ல நடந்து செல்லும் இடத்திலும் சேர்த்து தான் பள்ளம் தோண்டி இருந்தார்கள்.அந்த பள்ளம் தோண்டியதால் பிரதிவாதிகளுடன் சண்டை ஏற்பட்டது என்றால் இல்லை பிரச்சினை ஏற்பட்டது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு விசாரணை நடந்ததில் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளதால் அதில் தீர்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். இரு தரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் எதிராக புகார் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

15. அந்த பள்ளத்தில் எனது மனைவி இறங்கி கொண்டு அதிலிருந்து வெளியே வர மாட்டேன் என சொல்லிக்கொண்டு இருந்தார்களா என்றால் இல்லை. சங்கர் நகர் காவல் நிலையத்தில் பிரதிவாதி கொடுத்த புகாரில் பல்வேறு மனு ஏற்பு ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடைசியாக 2025 ஆம் ஆண்டு எதிர்மனுதாரர் மீது புகார் கொடுக்கப்பட்டு அந்த விசாரணையில் பிரதிவாதியின் மகனை போலீசார் கன்னத்தில் அறைந்து விட்டார்கள் என்றால் இல்லை.அதன் பிண்ணிட்டு 08.11.2025 அன்று பிரதிவாதிகள் இணையதளத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். தாவாதத்தில் பல நாட்களாக எனக்கு பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு வந்ததால் இரு தரப்பினரும் அவரவர் இடத்தில் சிசிடிவி கேமரா அமைத்துள்ளீர்கள் என்றால் நான் மட்டும்தான் அமைத்துள்ளேன்.பிரதிவாதிகளும் சிசிடிவி கேமரா அமைத்துள்ளார்கள் என்றால் இல்லை.எனது மகன் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னிட்டு அவரது பெயர் பலகை பிரதிவாதிகள் வீட்டில் முன்பு வைத்து பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல பெயர் பலகை வைத்தார்கள் ஆனால் அவர்களது வீட்டின் முன்பு வைக்கவில்லை.

16. அதன் பின்னிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அந்த பெயர் பலகை அகற்றப்பட்டு விட்டது என்றால் இல்லை. பலகை மட்டும் தான் அங்கு உள்ளது பெயர் ஏதும் அதில் பொறிக்கப்படவில்லை. நான் பல ஆண்டுகளாக பிரதிவாதிகளுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகிறேன் என்றால் இல்லை. பிரதிவாதிகள் தான் எனக்கு அச்சுறுத்தல் செய்து வருகிறார்கள். பிரதிவாதிக்கு அரசாங்கத்தில் இருந்து கலைஞர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவி பெயரிலும் மேற்படி கலைஞர் பேரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது வீட்டின் அருகே உள்ள அனைத்து நபர்களுக்கும் கலைஞர் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் இல்லை யாருக்கும் அதில் பட்டா வழங்கவில்லை. தற்போது ஆன்லைன் கணக்கில் பட்டா வழங்குவதற்காக கணக்கெடுப்பு செய்து கொண்டு சென்று உள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் பகுதியில் உள்ள நபர்கள் அனைவரும் அதற்கு கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

17. இரண்டு ஏக்கர் 40 சென்ட் இடத்தில் உள்ள நபர்களுக்கு கணக்கெடுப்பு செய்துள்ளார்கள். அந்த ரெண்டு ஏக்கர் 40 சென்டில் தான் தாவா சொத்தில் மரியன் தெரு வருகிறது என்றால் சரிதான்.டவுன் சர்வே பட்டா பெறுவதற்காக பிரதிவாதிகளும் விண்ணப்பம் செய்துள்ளார்கள் என்றால் அரசில் அவர்களது பெயர்கள் எழுதி செல்லவில்லை எனது பெயரும் எனது அண்ணன் பெயரும் தான் எழுதிக் கொண்டு சென்றார்கள். தாவா வழக்கு நிலுவையில் உள்ளதாக குறிப்பிட்டு நான் ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர், தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோருக்கு தடை மனு கொடுத்துள்ளேன்.ஒரு நபருக்கு அரசாங்கம் ஒரு ஏருக்கு மட்டும்தான் பட்டா வழங்கும் என்றால் சரிதான். தாவா சொத்தானது உட்பிரிவு செய்யப்படாத சொத்து என்பதால் அதனை அளவீடு செய்ய வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து நில அளவையர் வரமாட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தை அளவீடு செய்து கண்டறிய முடியாததால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியமான சொத்து என்பதால் சொத்து தொடர்பாக அரசாங்கம் மட்டும் தான் தீர்மானிக்க முடியும் என்றாலும் நீதிமன்றத்தில்

தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் பிரதிவாதி கோரி உள்ள எதிர்கோர் உரிமை எதிர்மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்தள்ள ரசீதுகள் மற்றும் ஆவணங்கள் தாவா சொத்தானது இவ்வளவு விஸ்தீரனத்தில் அடங்கியுள்ளது என எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தாவா சொத்தின் விஸ்தீரனங்கள் குறித்து காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.